சத்திய வேத

# பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)


யாழ்ப்பாண மேற்றிராசன
**மறைக்கல்விப் பரீட்சை — 1970**
மேற்படி மறைக்கல்விப் பரீட்சைக்கான — 6-ம், 7-ம், 8-ம் வகுப்புக்கான மாதிரி வினுக்களை 4ஆம், 5ஆம் பக்கத்திற் பார்க்கவும்.


95-ம் புத். | 1970-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 38-ம் இல.


## ஆசிய கிறிஸ்தவ மகாநாடு

யப்பான் தேசத்துத் தலைநகராகிய ரோக்கியோ நகரத்தில் இவ்வருடம் ஆடி மாதம் 14-ம் திகதி தொடக்கம் 22-ம் திகதி வரையும் ஆசிய கிறீஸ்தவ மகாநாடு உலக சரித்திரத்திலேயே முதன் முதலாக நடைபெற்றது. இம்மகாநாட்டில் ரோமன் கத்தோலிக்கர், புரொட்டஸ்தாந்தினர் "ஒதொடக்ஸ்" சபையினர் முதலிய பல கிறீஸ்தவ சபையினர் பங்குபற்றிக் கொண்டனர். மகாநாட்டில் பங்கு பெற்றவரின் தொகை சுமார் 200. அவர்கள் அவுஸ்திரேலியா பேர்மா, கம்போடியா, இலங்கை, ஹொங்கோங், இந்தியா, இந்தொனீசியா, யப்பான், தென்கோறியா, லாவொஸ்,மலாசியா, நியூசிலாந்து, பாக்கிஸ்தான, பிலிப்பைன், சிங்கப்பூர், தைலாந்து, தென்வியற்ஞு, தைவான் ஆகிய தேசங்களைச் சேர்ந்தவர்கள். இலங்கையின் சார்பாக கொழும்பு துணை மேற்றிராணியார் ஒஸ்வல்ட் கோமிஸ் அடிகளாரும், கத்தோலிக்க சங்க தலைவர் திரு. குருகுலசூரியா அவர்களும் பங்குபெற்றனர். கிறிஸ்தவ போதக அலுவல்கள் மாத்திரமல்ல, உலக அபிவிருத்திக்கு ஆசிய கிறிஸ்தவர்கள் செய்யவேண்டிய சேவைகள் முதலியனயாவும் அலைசி ஆராயப்பட்டன. இத்தகைய மகாநாடு கிறிஸ்தவ சரித்திரத்தில் ஒரு புதிய சகாப்தத்தைத் தொடக்கியிருக்கின்றதுஎன திரு. குருகுலசூரியா கூறியிருக்கின்றார்:

### சிட்னி

குதிரைப்பந்தயத் திடலில்
**பாப்பரசரின் திருப்பலி**

அரைக்கோடி தொகையான மக்கள் சிட்னிநகரில் பரிசுத்த பாப்பரசர் ஒப்புக்கொடுக்கும் திருப்பலியில் பங்குபெற ஒன்று கூடுவரென அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர். அதற்குகந்த இடமும் குறிக்கப்பட்டுவிட்டது. சிட்னிநகரிலுள்ள குதிரைப்பத்தயத்திடலே அதுவாகும். அவ்விடத்தின் நடுமையமாகிய "இரூன்ட் ஸராண்டின்" முன்பாக ஒரு. விசேஷ பலிபீடம் நிறுவப்பட இருக்கிறது. வரவேற்பு ஆயத்தக் குழுவின் தலைவராகிய திரு. ஜொயல் என்பவர் அவ்வைபவத்தில் கலந்துகொள்ள ஒருகோடி மக்கள் வந்தாலும் இலகுவாக ஒழுங்குகள் அந்நகரில் செய்துகொள்ள வசதிகள் உண்டு என்று அறிவித்திருக்கிறார்,

ஜோர்தானின் நிலைமைபற்றி
## பாப்பரசரின் கவலை

ஜோர்தானில் அத்தேசப் படைகளுக்கும், "கொமான்டோஸ்" ஆதரவாளர்களுக்கு மிடையில் சென்ற மாதம் நடைபெற்ற யுத்தநிலை பாப்பரசர் 6-வது சின்னப்பதங்கைக்குப் பெரிதும் கவலையை அளித்துள்ளது. பல ஆயிரக்கணக்கான மக்கள் இக்கைகலப்பில் மரணமடைந்ததும் பிரேதங்கள் குவியல் குவியலாய் அம்மான் நகரில் தேங்கிக் கிடந்ததும் நேயர்கள் அறிந்ததே. இந்நிலைமையைக் கேள்விப்பட்டே பரிசுத்த பாப்பரசர் "இது மிகப் பரிதாபமான நிலைமை: பெரும் ஆபத்து அடங்கியுள்ளது" என உணர்ச்சியோடு கூறினர். ஜோர்தான் தேசத்துக்குத் தனக்குள்ள விசேஷ பற்றுதலைப் பரிசுத்ததந்தை பன்முறையும் எடுத்துக் கூறியிருக்கின்ரூர்

### "தெரேசா தாயாரின்" இலங்கை ஸ்தாபனம்

கொழும்பு நகரில் மாதம்பிற்றிய பகுதியில் "இரக்க இல்லம்" என்ற நாமத்துடன் ஒரு வீடு உள்ளது. இதுவே எவராலும் கைவிடப்பட்ட, யாவர் உதவியுமற்ற வறியவருக்கு உதவி புரியும வேலையில் உலகப் பிரசித்திபெற்ற "தெரேசாதாயார்" சபையினரின் இன்றைய இலங்கை நிறுவனம். இங்கே இப்போது 5 இந்திய கன்னியர்கள் தொண்டாற்றுகின்றனர். சாதி, சமய, இன வேறுபாடுகளைப் பொருட்படுத்தாது தேவனின் பிள்ளைகள் எனக்கொண்டு எவர் உதவியுமற்றவரென மதிக்கப்பட்டோருக்கு இங்கே உதவி அளிக்கப்படுகின்றது. ஆரம்பநிலையில் இருக்கும இந்த ஸ்தாபனத்துக்குத் தர்ம சிந்தனையுடைய பெரியோரின் உதவி தேவைப்படுகின்றது. இங்கு நடக்கும் சேவையைப்பற்றி அறிந்துகொள்ள விரும்புபவர்கள் அந்த ஸ்தாபனத்தை நேரில் வந்து பார்த்துப் போக அன்புடன் அழைக்கப்படுகின்றனர்,

**18—10—70**

**விசுவாசப் பரப்புதல்**

**ஞாயிறு**

### விசுவாசப்பரப்புதல் ஞாயிறு

இந்த வருடத்தின் விசுவாசப் பரப்புதல் ஞாயிறு 18—10—70 இல் அனுசரிக்கப்படும். எல்லா விசுவாசிகளும் (ஆயர், குருக்கள், சந்நியாசிகள், ஆசிரியர், இல்லற அப்போஸ்தலர், பொதுநிலையினர்) தங்களுக்குரிய முறையில் இத்தினத்தில் பங்குபற்ற வேண்டுமென்று திருச்சபை விரும்புகிறது.

"திருச்சபையின் பிள்ளைகள் எல்லாரும் உலகின்பால் தாங்கள் கொண்டுள்ள பொறுப்பைப் பற்றிய உயிருள்ள உணர்வைப் பெற்றிருக்கவேண்டும். உண்மைக் கத்தோலிக்க உணர்வைத் தங்களில் வளர்க்க வேண்டும். நற்செய்தியை அறிவிக்கும் பணியில் தங்கள் ஆற்றல் முழுவதையும் செலவிடவேண்டும். கிறிஸ்தவ வாழ்வை நல்லமுறையில் வாழ்வதே விசுவாசத்தை பரப்புவதற்கான தங்களது முதல் முக்கியமான கடமை என்பதை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும் ... "
(வத்: சங்: ஏடு. பக். 666.)

செபம் — தபம் — பரித்தியாகம்.

## டே பிறிஜர் அடிகளில் 'யுத்த குற்றம்' இல்லை

ஜேர்மனிதேச மியூனிச் நகர உதவி மேற்றிராணியாராக இருவருடங்களுக்கு முன் அபிஷேகம் செய்யப்பட்ட டெ பிறிஜர் அடிகள் சென்ற யுத்தகாலத்தில் ஹிட்லரின் சேனையில் உத்தியோகம் வகித்தவர். அக்காலத்தில் ஹிட்லரின் கட்டளைகளுக்கு அமைந்து அநேக யூதர்களின் மறைவுக்கு உடந்தையாயிருந்தார் என அத்தேச யுத்தகுற்ற விசாரணைக்குழு அவரது நடவடிக்கைகளை விசாரித்து வந்தது. விசாரணையின் முடிவு சென்றமாதம் வெளிவந்தது. டெ பிறிஜர் அடிகள் "யுத்த குற்றம்" எதுவும் செய்ததில்லையென்பதே அம்முடிவு —முடிவு எவ்வாருயிருப்பினும்,டெ பிறிஜர் அடிகளார் தாம் பெற்றிருந்த துணை மேற்றிராணியார் பதவியில் மேலும் நீடித்திருக்க விரும்பாததால் ஓய்வு பெறுகின்ரூர்.

### பௌத்த ஓவியரின் கிறிஸ்தவ சித்திரப் படக்காட்சி

கீர்த்திபெற்ற ஓவியரான ஹென்றி தர்மசேஞ அவர்கள பௌத்த மதத்தைச் சேர்ந்தவர். இவர் கிறிஸ்தவ விவிலிய நூல்களை நன்ருக வாசித்து அந்நூலில் கூறப்பட்ட சில சம்பவங்களைச் சித்திரப் படங்களாகத் தீட்டியிருக்கின்ரூர். இப்படங்களின் காட்சி கொழும்பு கலைக் கூடத்தில் இம்மாதம் 19-ம் திகதி தொடக்கம் 30-ம்திகதி வரையும் நடைபெற இருக்கிறது. ஏற்கனவே இப் படங்களைப் பார்த்தவர்கள் ஆக்கியோனுடைய கலைத் திறமையையும் கிறிஸ்தவ சமய அறிவையும் புகழ்ந்து கொள்கின்றனர்.

### சமய நட்புறவுக்கு கூறப்படும் நல் மருந்து

சர்வசமய சங்கத்தினர் பிரசுரிக்கும் சஞ்சிகையின் சென்ற பதிப்பில் இந்நாட்டின் சமய நட்புறவுக்கு, 4 அம்சங்கள் கொண்ட அரிய ஒரு யோசனை கூறப்பட்டிருக்கின்றது: அந்த அம்சங்கள் பின்வருமாறு:

(1) குறிக்கப்பட்ட ஒரு சமய போக்கைமாற்ற லௌகிக நன்மைகளால் வசீகரிக்க முயலாதிருத்தல்.

(2) தொழில், கல்வி, உத்தியோகம் முதலியவற்றில் முன்னேற ஒருவரின் சமயம் தடையாயில்லாதிருத்தல்.

(3) சமய வழிபாட்டுக்கோ, போதனைக்கோ எல்லாச் சமயங்களுக்கும் ஒரேவித சந்தர்ப்பங்கள் அளித்தல்;

(4) தத்தம் சமயகல்வியைப் பெறுவதற்குச் சகல சமயத்தவருக்கும் தகுந்த சந்தர்ப்பங்கள் கொடுத்தல்

**"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சர்வேசுரன் நமக்கு தைரியம், சிநேகம், மனஅமைதி என்பவற்றின் பரிசுத்த ஆவியைத் தந்திருக்கிருர்."

**(2-ந் தீமோத். 1-ம் அதி. 7-ம் வசனம்)**

இன்றைய உலகு பலவித நாட்டங்களினுல ஈர்க்கப் பட்டு, மன அமைதியின்றி புரட்சிநிலையில் இருப்பதை நாம் கண்களால் காண்கின்ேறும். நவீன சாதனங்கள் வழியாக அறிகிறேரும். இவற்றிற்கெல்லாம அடிப்படைக் காரணம் என்ன? பிதாவின் வாக்குத்தத்தமாகிய தூய ஆவியானவரைக் கொண்டிராததேயாகும். "கிறீஸ்துவின் ஆவியைக் கொண்டிராதவன் கிறீஸ்துவை உடையவன அல்லன்" எனகிருர் பரி. பவுல் அப்போஸ்தலர். மாருக, கிறீஸ்துவின் ஆவியைக் கொண்டிருப்பவனே, தேவசிநேக, பிறர்சிநேக அக்கினியால் நிரப்பப்பட்டவனுய், அச்சிநேகத்தினிமித்தம, எவ்வித நெருக்கிடைகளையும, கஷ்டங்களையும், சிலுவைகளையும், இரத்தம் சிந்துதலையும் தாங்கக்கூடியவனுகின்ருன். தாங்கக்கூடிய தைரியத்தை அடைகின்ருன. சிநேகத்தோடு கூடிய தைரியம், அவனுக்கு மன அமைதியைக் கொடுக்கிறது.

உலக இரட்சகரின் பிறப்பை அறிவிக்க வந்த வானதூதர், "நல்மனத்தோர்க்கு அமைதி உண்டாகுக" என்று பாடிய மன அமைதியும் இதுவேயாகும். யார் இந்த நலமனத்தோர்? உண்மையாகவே நேர்மையான வழியில் இறைவனை உள்ளன்பாய்ச் சிநேகித்து, பிறர்சிநேகக் கிரிகைகளைப் புரிந்து, எவ்விததுன்பங்களையும் நல்மனதாய்ச் சகிப்போரே. இவர்களுக்குத்தான் நம்பரலோகபிதா, மனஅமைதியைத் தூயஆவியானவர் மூலம் பொழிந்தருளுகிருர். இம்மகத்தான கொடைகளினுல் நிரம்பிவழியும் ஆன்மாக்கள் இறைவன் அழைப்புக்குச் செவிகொடுக்கின்றனர். இறைவாக்குக்குப் பணிந்து நடக்கின்றனர். அமைதியாக இறைபணியைச் செய்து முடிக்கின்றனர். தூயஆவியானவரும அவர்கள் உள்ளத்தில் வசித்து, அவர்களுக்காகச் செபிக்கிருர். பரி. சின்னப்பர் இதைப்பற்றி ரோமருக்கு எழுதிய நிருபம் 8-ம் அதி. 26-ம் வசனததில் பின்வருமாறு வசனிக்கின்ருர்: "நாம் தக்கபடி மன்ருடி கேட்பதென்னவென்று அறியாதிருக்கிேரும். ஆனல், தூய ஆவியானவரோ நமக்காக, வாக்குக்கெட்டாத பெருமூச்சுகளோடு பிரார்த்திக்கிருர்" என்கிருர். கிறீஸ்துநாதர் தொடக்கிவிட்ட இரட்சிப்பின் மீட்புப்பணியைத் திருச்சபை மூலம் தொடர்ந்து நடத்தி நிறைவுபடுத்துபவரும் தூய ஆவியானவரே. இவரே திருச்சபையின் ஆன்மாவாக இருந்து, இரண்டாயிரம் ஆண்டுகளாக விண்ணரசின் நேரிய பாதையில் நடத்திவருகிருர். உலக முடிவுவரை நடத்துபவரும் அவரே. மனித கண்களுக்குப் புலப்படாத இறைவனின் ஆட்சி, அந்தத் தெய்வீக ஆளுகை, தனது முழு மாட்சியுடன் வெளிப்படும காலமாகிய உலக முடிவுவரை, பரிசுத்த ஆவியானவரே, பலவிதத்திலும், குழப்பம அடைந்திருக்கும் உலகசமுதாயத்தை திருச்சபை வழியாக அமைதியின் பாதையில் நடத்த விரும்புகிருர். பரி. சின்னப்பர் 2-ம் கொரி. 1-ம் அதி. 21-ம், 22-ம் வசனங்களில் என்ன சொல்லுகிருர்? "இறைவன் நம்மை உறுதிப்படுத்துகிறவரும், அபிஷேகம் பண்ணுகிறவருமாய் இருக்கிருர். அவரே நம்மை முத்திரையிட்டு, நம் உள்ளங்களில் இருக்கும்படி, பரிசுத்த ஆவியானவரை அச்சாரமாக அளித்தார்" என்கிருர். இன்றைய சமுதாயமோ, தம்வாழ்வில் ஓர் புதிய அமைப்பைப் பெறவிரும்புகிறது. முறைக்கு முறை தம் மத்தியில் காணப்படும் பூசல்கள், கொந்தளிப்புகள், அழிவுகள், ஆக்கிரமிப்புகள் முதலியவற்ருல் அலலற்படும் தாம, அவற்றை விலக்கி இன்பத்தைக் கண்டடைய விரும்புகிறது. விரும்பும் விதமாக நிறைவான இன்பத்தைக் கண்டடைகிறதா? இல்லையே! பொருளாதாரத்தை வளர்ப்போர் அங்கே இன்பத்தைக் காட்டுகின்றேம் என்கின்றனர். அங்கே இன்பம் உண்டா? இல்லை. வைத்திய நிபுணர் வியாதிகட்கெல்

— நாதன் —

லாம் மருந்து கண்டுபிடித்து விட்டோம் என்று விம்பு கூறுகின்றனர். என்ன ஏமாற்றம். வேருெரு புதுவியாதி தலைகாட்டி அவர்களைத் திணற வைக்கிறது. விஞ்ஞானிகள் புதிய முறைகளை, புதியஉலகைக் கண்டுபிடித்துவிட்டோம் என்று பறைசாற்றுகின்றனர். அங்கும் ஏமாற்றம். நினைத்ததற்கு மாருகவேபலன் கிடைக்கிறது. இப்படியே மனிதன் வழிதப்பி நடந்து ஏமாற்றம் அடைகின்ருன்.

ஆயின் இவர்களுக்கெல்லாம் உலகின் தீபம்போல், கலங்கரை விளக்கம்போல் காட்சியளிக்கும் நம தாயாம் திருச்சபை தூயஆவியானவரின் வெளிச்சத்தில் விடைகூறுகின்றது. பலவிதத்திலும் அலைக்கழிக்கப்படும் மக்கட் சமுதாயத்தை அழைத்து, கிறீஸ்துநாதர் கற்பித்தவழியில், நடத்திச் செல்லவிருப்புகிறது. மனிதரின் தேவைகளையும், அவற்றைப் பூர்த்திசெய்யும் விதத்தையும், வேதாகமத்திலிருந்து காண்பிக்கின்றது. "நீ என்னைத் தேடு. சகலமும் உன்னைத் தேடும்" என்று கிறீஸ்து சொன்ன வாக்கை நினைப்பூட்டுகிறது. "வழியும், சத்தியமும் ஜீவனும் நானே" என்று சொன்ன உண்மைத் தெய்வத்திடம் வாருங்கள் என்று இருகரம் விரித்து அழைக்கின்றது. தனது கதவுகள் யன்னல்கள் எல்லாம் திறந்து வைத்து, "வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே, என்னண்டை வாருங்கள். நான் உங்களைத் தேற்றுவேன்" என்று கிறீஸ்து சொன்ன ஆறுதல் மொழி மூலம், யாவரையும், திருச்சபை தன்னிடம் அழைக்கிறது. இவ்வித தெய்வீக அழைப்பை விடுக்கும் திருச்சபை நவீனபுரட்சியால தடுமாறும் தற்கால உலகைப் புதுக்குவித்து, மனித கண்களுக்குப் புலப்படாத இறையாட்சியை, அறியச்செய்ய, புதிய யெருசலேமை உருவாக்க, உன்னத சீயோன் நகரைக் கட்டியெழுப்ப, நற்செய்தியைப்பரப்ப முன்நிற்கின்றது. உலகின் குடிகள்எல்லாம் இறைவனின் மக்கள், ஒரே அன்பின் தெய்வத்தின் பிள்ளைகள என்பதை உணர்த்த 2-ம் வத்திக்கான் சங்கத்தைக் கூட்டியது. பகுதி பகுதியாக மக்கட்சமுதாயத்தைப் பிரித்து, ஒவ்வோர் பகுதியினருக்கும, அவரவர் கடமையை திறமபட விளக்கியிருக்கிறது. தன்னுலான உதவிசெய்ய விருபபுகிறது. அவற்றில் முக்கியமாக ஆயர்குருமாரின் பணியின் மகத்துவத்தை, கடமையை விளக்கியபின், பொதுநிலையினரை அடுத்தபடியில்வைத்து, அவர்கள் புனித நிலையையும், அவர்கள் கடமை அப்போஸ்தலசேவை என்பதையும் மிக தாராள மனத்துடன் காண்பிக்கின்றது. இங்கு கத். கிறீஸ்தவர்கள் யாவரும், தங்கள் தாழ்மை, அன்பு, முன்மாதிரியான சீவியத்தாலும், மனுக்குலம் யாவரையும், ஒரே குடும்பமாகிய திருச்சபையில் கூட்டச் சேர்க்கவேண்டும் என்றும் பரிவுடன் கேட்கின்றது இவற்றைக் கடைப்பிடித்தே ஒவ்வோர் பகுதிகளிலும் ஆராதனைகளும், ஒற்றுமை இயக்கங்களும, குடும்ப சந்திப்புச் செபங்களும் நடைபெற்று வருகின்றன. அன்றியும், ஒவ்வோர் பகுதியையும் பரிபாலிக்கும் ஆயரும் குருமாரும், தம்மாலான முயற்சி எடுத்து, பொதுநிலையினர், எவ்வாறு உலகின் ஒளிவிளக்காகவும், சாரமூட்டும் உப்பாகவும அமையவேண்டும் என்று விளக்குகின்றனர். வருங்கால உலகைத் திருத்துவதென்ருல், பாடசாலை மாணவரை மாற்றி அமைப்பதே குறுகிய வழியெனக் கண்டு பிடித்தனர். விஞ்ஞானங்களில் பெரிய விஞ்ஞானம் இன்றைய சிறுரை பண்பும், ஒழுக்கமும் உள்ள பிரசைகளாக்குவது அல்லவா? எனவே மாணவரைப் பண்புள்ளவர்களாக்கும் மூலக்கருவிகள் ஆசிரியர்கள் அல்லவா? ஆகவே ஆசிரியர்கள், விசேஷமாகக் கத்தோலிக்க ஆசிரியர்கள் கிறீஸ்துவின் சாயலாக அமையவேண்டும். இது விஷயத்தில் இன்று முன்நிற்பவர்கள் கத். கிறீஸ்தவ ஆசிரியர்களே: இதற்கெல்லாம் கைகொடுத்து வழிசெய்து, ஆசிரியர் செபிக்க, தியானிக்க, தங்கள் கிறீஸ்தவ ஆசிரியக் கடமையை உணர வசதியான இல்லங்களைத் தயாரித்து, போதிப்பதற்கேற்ற குருமாரை ஊக்குவித்து, கடைசியாக, தாமே சமுகந்தந்து, ஆசிரியாது நல்மனதைப்பயன்படுத்தி, பலிநிறைவேற்றி, "ஆயரின் விருந்தில் பங்குபற்றுவோர் பேறுபெற்ேருர்" எனறு அனபு மொழிகூறி, நற்கருணை விருந்தைப் பகிர்ந்தளித்து இனபுறச் செய்தார் என்ருல், அபபெருமை எங்கள் மகா மேன்மைதங்கிய யாழ்ப்பாண மேற்றிராணி ஆண்டகைக்கே உரித்தாக வேண்டியது. அன்றியும் அவர் ஆராதனையின்போது வாசித்த சுவிசேஷம், தூய ஆவியானவர் அப்போஸ்தலர் மேல் இறங்கி, அவர்களை இறைபணிக்குப் பக்குவப்படுத்தியது பற்றியதே. அப்படியே ஆசிரியரும் ஒன்றுகூடி, செபத்திலும தியானததிலும நிலைத்திருந்து, திவ்விய நற்கருணை விருந்தில பங்குபற்றி, தூயஆவியானவரின் வெளிச்சத்தில், முந்திரிகைச் செடியைப்போல, அவசியமற்றவைகளைக் கத்தரித்து, பசளையிட்டு நீர்ப்பாய்ச்சி, நற்பயன் கொடுக்கவேண்டும் என்று கூறியது யாவரையும் சிந்திக்கவும் செயல்படவும தூண்டியது. இவ்வாசிரியர்கள் தங்கள் செபதபதியானத்தால் பெற்றுக்கொண்ட தூயஆவியானவரின் கொடைகளான தைரியம், சிநேகம், மனஅமைதி என்பவற்றைப்பெற்று, கத். கிறீஸ்தவ ஆசிரியசேவை உண்மையான இறைபணியென உணர்ந்து நற்பண்புள்ள மாணவரை வருங்கால உலகில் உருவாக்குவார்கள் என்பதில் ஐயமில்லை.

## உன் கடன் என்ன?

— எஸ். எம். ஜே. —

### மறு கிறிஸ்து

மற்றெரு கிறிஸ்துவாய்த் திகழ்பவர் குருவே
குறைவற அவரை மதித்து நீ நடப்பாய்.

இறைவனின் பிரதிநிதி அவர் தாமே
திடமுடன் அவரை நம்பி நீ வாழு.

பாரினில் சிறந்தவோர் பேருப காரி
பரிவுடன் நன்றி செய்வதுன் கடனே.

### பலிபீடத்தில்

பலியுடன் உனது செபங்களைச் சேர்த்து
பரம பிதாவுக் களிப்பவர் குருவே
மறந்திடாதவரைத் தினம் நினைப்பாயே.

உன் பொருட்டாகவும் உத்தரிப்பவர்கள்
சபையினில் உள்ள உறவினர்க்காகவும்
உருக்கமாய் அவரே அனுதினம் செபிப்பார்.

இறைவனின் இரக்கம் அவருக்கும் சேர
இறைவன் பாதம் அவர் போய்ச் சேர
இறைஞ்சுவாய் இறைவனை அனுதினம் நீயே.

### பச்சாத்தாபத்தில்

ஆன்மநோயை அகற்றிடும் வைத்தியன்
ஆற்றுவார் உனது ஆன்ம ரணங்களை.

இறைவனை அடைய நனிவழி காட்டுவார்
இசைந்துளந் திருந்தி அவர்வழி நடப்பாய்.

நடு நிலைமாரு நாயகன் குருவே
பணிவுடன் அவரது தீர்ப்பினை ஏற்பாய்.

### பொது வாழ்வில்

குருவுக்குத் தீர்ப்பிட அவசரப்படாதே—இக்கு
மனிதனே அவரும், மறந்திடலாமோ?

குருவுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறு— புதுத்
தென்பளித்தவரைத் திடமுறச் செய்வாய்.

குருவின் குறைகளை இறைவனுக்கோது—அதை
உணரவும் திருந்தவும் இறைவனை வேண்டு.

பொறுப்புகள் பலவும் அவருக்கு உண்டு—அதில்
நல்வழி நடத்த ஈசனை வேண்டு.

அந்திம வேளையில் ஆண்டவன் இரக்கம்–அருகில்
அவருக்கு இருக்க வருந்திநீ கேளு.

## 2-ம் வருட நிறைவு தினம்

**செல்வி. மேரி அன்சலா றட்ணேஸ் தேவராசா**

**தோற்றம்: 25-5-64.** **மறைவு: 8-10-68.**

"சிறுவர்களை என்னிடம் வர விடுங்கள்; அவர்களைத் தடை செய்யாதேயுங்கள்."

இறைவனின் சித்தப்படியே இவ்வுலகில் எம்மை விட்டுப் பிரிந்த மேரி அன்சலா றட்ணேஸ் அவர்களின் இரண்டாம் வருட நிறைவு தினம் 8-10-70ல் பூர்த்தியடைவதால் அன்னரின் பேரால் 14-10-70 புதன்கிழமை உருத்திரபுரம் புனித பத்திமா ஆலயத்தில் சகல ஆத்துமாக்களுக்காகவும் ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

இதைக் கண்ணுறும் சகலரும் சகல ஆத்துமாக்களுக்காக மன்ருடும்படி பணிவாய் கேட்டுக் கொள்ளுகின்றேம்.

இவரின் பிரிவால் துயருறும்: பெற்ருேர், சகோதரர், இனசனர். மண்டைதீவு,

**நன்றியறிந்த ஸ்தோத்திரம்**

கைவிடப்பட்டவரின் உய்விடமும், நம்பிக்கை இழந்தவரின் நம்பிக்கையுமாகிய புனிதததேயுவை பத்தியுடன் வேண்டிக் கொண்டேன். எனது மன்ருட்டுக் கிடைத்தது புனிதருக்கு கர்த்தராகிய கிறீஸ்துவின் நாமத்தினுலே எனது நன்றியறிந்த தோத்திரம். புனித ததேயுவே எங்களுக்காக மன்ருடும்.

பாசையூர் ஓர் அடியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் உலகு



அன்புநிறை சோதர சோதரிகளே!

இதோ இளைஞர் உலகின் Iஆம் இதழ் உங்கள் கரங்களில் தவழ்கிறது. இது இளைஞர் உலகு. இளைஞர் என்றதும் ஆண்களுக்கு மட்டும்தான் என்ற தப்பான அபிப்பிராயத்தினுல் சோதரிகள் கவனியாது விட்டுவிட வேண்டாம். உலகு என்னும்போது ஆண், பெண் ஆகிய இருபாலாரையும் குறிப்பிடுகிறது. அதுவும் இளைஞர் உலகு என்ருல் கூறவும் வேண்டுமா? எதனையும் சாதிக்கும் ஆற்றல் படைத்த வாலிப உள்ளங்களே இளைஞர்உலகு சிறப்புற அனைவரும் ஆவன செய்வீர்கள் என எதிர் பார்க்கிறேன். இதுபற்றிய அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதும் அதன் வளர்ச்சிக்கு உதவியாய் இருக்குமல்லவா? எனவே கதை, கட்டுரை, கவிதை, மற்றும் விடயங்களை "இளைஞர் உலகு" காவலன் அலுவலகம், மேற்றிராணியார் இல்லம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மீண்டும் சந்திப்போம்

அன்புள்ள சோதரன்

## இன்றைய இளைஞர்....

இருபதாம் நூற்ருண்டு இளைஞர் நூற்ருண்டு. எங்கும் இளைஞர்—எதிலும் இளைஞர். இளைஞர் இன்றேல் இவ்வுலகே இல்லை. இன்றைய இளைஞர் நாளைய உலகை ஆளும் தலைவர்கள். உணர்ச்சியும் எழுச்சியும் மிக்கவர்கள் இளைஞர். மனித சமுதாயத்தின் மாபெரும் சொத்து இளைஞர். ஆனல் இந்த மாபெரும் சக்தி வாய்ந்த இளைஞரின் எதிர்காலம் அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இந்த அழிவு மனிதசமுதாயத்தின் மாபெரும் அழிவு என்றே கூறவேண்டும்.

எனவே இளைஞரின் ஒழுக்க வளர்ச்சியில் கவனம் செலுத்துவது மனித சமுதாயத்துக்குச் செய்யும் மாபெரும் சேவையாகும். பல வகை இயக்கங்களும் இளைஞரைத் தம்பால் ஈர்க்கப் போட்டி போடுகின்றன. இவற்றுள் முக்கியமானவை சினிமாவும் — அரசியலும். அரசியல் நிலையில்லாது அலைமோதுகிறது. சினிமாவோ பாலுணர்ச்சியை இளைஞரிடையே ஊட்டி அவர்கள் வாழ்வைப் பாழ்படுத்துகிறது.

மக்களே சிந்தியுங்கள். மகத்துவம்வாய்ந்த இளைஞரின் மகத்தான சேவைகளைப் பயன்படுத்துங்கள். சமுதாயம் சீர்பெறவேண்டுமா? அன்றேல் சமூகம் முன்னேற வேண்டுமா? இளைஞர் இயக்கங்களை ஏற்படுத்தி அதனல் நன்மை பெறுங்கள். ஆனல் உண்மை உணராது சிலரோ வாலிபர் உலகை எட்டத் தள்ளுகின்றனர். எட்டி நிற்கும் இளைஞரைக் கட்டியணைத்துக்கிட்டவரச்செய்து அவர்களின் சமூக, சமய சேவைகளைப் பெற முயற்சி செய்யுங்கள். இளைஞரே! இதோ உலகு உங்கள் உன்னத சேவைகளைக் காத்திருக்கிறது. அணியாய்த் திரளுங்கள் பணிபுரிய!

'— திராட்சையூரான்'

நிமிடக்கதை

## புத்தி பிறந்தது

சுப்பு தன் மகன் ராமுவை சிறுவயதுமுதல் கண்டியாது குற்றங்களைத் திருத்தாது வளர்த்து வந்தான். ராமுவும் வளர்ந்து வாலிபப் பராயத்தை அடைந்தான். தன் இஷ்டப்படி வளர்ந்த ராமு தந்தையையே மதிக்காது திட்டியும் தூற்றியும் வந்தான்.

ஒருநாள் ஏதோ காரணத்தின் நிமித்தம் தந்தையை வாய்க்குவந்தபடி திட்டினன். பாவம் வயோதிபத் தந்தை என்ன செய்வார்? ஒன்றும் பேசாதிருந்தார். தந்தை மீது ராமுவுக்கு ஆத்திரம் அதிகரித்தது.

வீட்டுக்குள் சென்ற ராமு தந்தையின் இரு கரங்களையும் பற்றிப் பிடித்து கொர... கொர...என வெளியேஇழுத்துக்கொண்டு வீட்டு முற்றத்தில் நின்ற மாமரம் வரைக்கும் கொண்டு வந்து விட்டான். "போதும் நிறுத்தடா மகனே? நானும் என் தந்தையை இந்த மரத்துக்கப்பால் இழுத்துச் செல்லவில்லை"என்ருர். புத்தி பிறந்தது ராமுவுக்கு. தன் தந்தையிடம் தன்தவறுக்கு மன்னிப்புக் கேட்டார்.

இ. பே.

## அன்னைக்கு ஓர் அழகியமாலை

ஐப்பசிமாதமல்லவா நம் அன்னைக்கு ஓர் அழகியபாலை தொடுப்போம்.

❋ மரியாயின் மட்டிலுள்ள பக்தி வணக்கங்கள் எல்லாவற்றிலும் மகா உபயோகமானது செபமாலை.

— அல்போன்ஸ் லிகோரி

❋ செபமாலை எல்லாச் செபங்களைக் காட்டிலும் மேலானது.

— பிரான்சிஸ் சலேசியார்

❋ செபமாலை பூசைப் பலிக்கு இரண்டாவதாக இருக்கும் அதி உன்னத பக்தி வணக்கமாகும்.

— புனித காரலூஸ் பரமேயோ

❋ பகைவரை வெல்ல ஆயிரம் ஆட்களைக் கேட்கவில்லை. செபமாலையைப் பக்தியுடன் சொல்லும் ஒருவர் போதும்.

— 10-ம் பத்திநாதர்.

❋ மக்களுக்கும் திருச்சபைக்கும் வரும் தீங்குகளை நீக்க அருமருந்தாய் இருப்பது செபமாலை.

— சாமிநாதருக்கு அன்னை

❋ செபமாலை விசுவாசிகளைக் காப்பாற்றும் பாதுகாவல்.

— 8-ம் கிளமன்ட்

❋ பாவிகளைத் தேற்றிப் புண்ணியங்களைப் பொழியும் கருவூலம் செபமாலை.

— 5-ம் சின்னப்பர்.

❋ அன்னைமரியின் சிரசில் விசுவாசிகள் அனுதினமும் சூட்டும் அழகிய மலர் செபமாலை.

— 10-ம் பத்தினாதர்.

❋ செபமாலை வேதப் பரம்புதலின் வியாக்கியானம்.

7-வது அர்பன்.

❋ செபமாலை நற்செய்தியின் கருணைப் பொருள்.

— 12-ம் பத்திநாதர்.

❋ கூடிச் செபிக்கும் குடும்பத்தில் குலையாது ஒற்றுமை.

— வண.பற்றிக் பெயிட்டன்.

எனவே, நாம் அனுதினமும் செபமாலை செபிக்காமல் இருக்கலாமா?

## இளமை என்னும் இன்பப் பூங்கா

இன்பப் பூங்கா என்றும் இனிமைப்பருவம் என்றும் பலவிதத்தில் இளமைப் பருவத்தைப்பற்றிப் பெரியோர் கூறியுள்ளனர். அவர்களின் உரை சிலவற்றை இங்கு படிப்போம்.

'நீரில் தோன்றும் குமிழியைப் போன்றது இளமைப் பருவம்'

— குமரகுருபரர்.

'இளமை கனவு காணும் பருவம்'

— திபேஸ் தாஸ்.

'இளமை ஒரு பூங்கா. ஆனல், அப்போதே நாகங்களும் தலைகாட்டத்தொடங்குகின்றன'.

— அகிலன்.

'வாழ்நாளில் இனிய பருவம் இளமை — இதை நாம் முதுமையில்தான் உணர்கிறோம்'

— இங்கேடார்.

'இளமை என்னும் பக்குவமான வயதில்தான் எந்தவிதக் குணப்பண்பும் உருப்பெறுகிறது. எண்ணங்கள் ஆழமாக வேரூன்றுகின்றன.'

— பிளேட்டோ

தொகுத்தளிப்பவர்:—ஓர்இளைஞன்

## அழியா வீடு

அழியும் உலகிது நிலையிலா வாழ்விது
பழியும் பாவமும் பரந்த உலகிது
அழியா வீடொன்று முடிவில் உண்டு
எழிலாய் வாழ அதுவே வேண்டும்.

அன்பர் நண்பர் அதிகம் உள்ளார்
இன்பம் பலவும் இங்கே உண்டு
துன்பம் தானும் வருத்தி வாட்டும்
என்ன பயனும் இல்லை யிவ்வாழ்வால்.

பணமும் பொருளும் உண்டு இங்கே
பசியும் பிணியும் உண்டு இங்கே
தினமும் சாவை நினைத்து வாழ்ந்தால்
மனமும் மாறும் மகிழ்வும் பெறலாம்.

தூதர் தினமும் துதித்து நிற்கும்
தூயோன் பாதம் வீற்றிட நாமும்
தூய வாழ்வு வாழ்ந்திட வேண்டும்
தூயோன் இல்லம் பெற்றிட லாமே.

அழியும் வாழ்விங்கு அவனியில் அறிவீர்
பழியும் பாவமும் நிறைந்த உலகு
அழியா வீட்டைப் பெற்றிட நாம்
எழிலாய் இங்கு வாழ்ந்திடு வோமே.

காந்தி வாழ்வில்

## தீயபழக்கம் நீங்கியது

இம்மாதம் 2ஆம் திகதி சாந்தமூர்த்தி காந்தியின் ஜயந்தி ஞாபகத்தை அகில உலகும் கொண்டாடியது. இதோ அவர் வாழ்க்கையிலிருந்து ஒரு சுவையான, ஆனல் பயனுள்ள சம்பவம்.

அவன் இளைஞன்தான். ஆனல் மிகுந்த பயம் உள்ளவன். பயம் மட்டுமல்ல மிகுந்த கோழையும் கூட. எனவே, தூர்ப்பழக்கம் ஒன்றும் அவனிடம் குடிகொண்டிருந்தது. தன் பெரிய தந்தையாரின் மகனுடன் சேர்ந்து புகைக்கப் பழகினன். ஆனல் அவனிடம் சுருட்டு வாங்கப் பணம் கிடைக்கவில்லை. எனவே வீட்டு வேலைக்காரனிடம் திருடினன். அதுவும் போதவில்லை சிறிய தந்தையார் எறியும் குறைச்சுருட்டுகளைச் சேகரித்தான், அதனலும் அவன் திருப்தியடையவில்லை. ஒருவித செடியின் தண்டுகளைப் புகைத்தான்; பயன் இல்லை. பெரியோர்க்குப் பயந்து புகைப்பதில் சுவையில்லை. தான் விரும்பியபடி பயமில்லாது எல்லோருக்கும் முன்பாகப் புகைக்க முடியவில்லை என்ற கவலைதான் அவனுக்கு.

தற்கொலைசெய்வது என்று தீர்மானித்தான். தற்கொலை என்றதும் பயமும் ஏற்படத்தான் செய்தது. ஏதோ ஒரு மரத்தின் விதைகளைச் சாப்பிட்டால் சாகலாம் என அறிந்தான். ஒருநாள் மாலையில் குறிப்பிட்ட விதைகளைச் சாப்பிட்டுத் தற்கொலைசெய்வது என்று தீர்மானித்துக் கொண்டு ஒரு கோவிலை அடைந்தான். இதனைச் சாப்பிட்ட பின்பும் உயிர்போகாவிட்டால்...... என்ற பயம் ஏற்பட்டது. வீட்டுக்கு ஓடினன். அன்றே ஒரு தீர்மானம். பணம் திருடுவதில்லை; புகைப்பதில்லை; ஆம் அன்றிலிருந்து சாகும்வரை புகைக்கவேயில்லை.

இந்த இளைஞன்தான் பிற்காலத்தில் உலகம் போற்றும் காந்திமகான். நம்மிடம் இருக்கும் தீயகுணங்களையும் இவ்விதமே ஒழித்துக் கட்டலாமல்லவா?

## சிறுமலர் சிந்திய மறுமலர்கள்

சிறுமலர் எனப் புகழ்பெறும் சின்னத் திரேசாளைப் பற்றி அறியாத இளம் உள்ளங்கள் இல்லையென்றே கூறலாம். இதோ அந்தச் சிறுமலர் சிந்திய நறுமலர்கள் சில.

அன்பு இல்லாமல் செயற்கரிய செயினும் வீணே.

நான் பரிசுக்காகப் பணிபுரியவில்லை. அன்பிற்காக, ஆன்மாவுக்காக அறப்பணி ஆற்றுகிறேன்.

துன்பங்களை அன்புசெய்வதே என் இன்பம்.

யேசு பெருஞ் செயல்களையல்ல, அன்பையும் நன்றியையுமே விரும்புகிருர்.

அன்பிற்காக மரிப்பது ஓர் அழகிய சாவு.

எத்துணை ஏழையோ அத்துணை உன்னை ஆண்டவர் அன்பு செய்வார்.

யேசுவிடம் பேச நாம் மிகச் சிறியவர்களாக மாற வேண்டும்.

மற்றவர்களின் குற்றங் குறைகளைப் பொறுத்துக் கொள்வதில்தான் அடங்கியுள்ளது உண்மை அன்பு.

எனக்கு அன்பு செய்ய ஆயிரம் இதயங்களைக் கொடுத்தாலும் அவை எனக்குப் போதாது.

எனவே, சிறுமலர் காட்டும் சீரிய, சிறந்த, சிறிய வழியில் நடக்க முயல்வோம். இறைமலர் கொட்டும் இனிய தேனைப் பருகுவோம்.

— மலர் விழியாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக் கல்விப் பரீட்சை — 1970.

(மாதிரி வினுக்கள்)

## 7-ம் வகுப்பு

நேரம் 1½மணி. சுட்டிலக்கம்:

### பகுதி I.

1. பின்வருவனவற்றிற்குச் சுருக்கமான விடை தருக.
   1. உறுதிப்பூசுதல் எமக்குத்தரும் கொடைகள் எவை?
   2. திருப்பலியின்போது குரு அணியும் உடையின் நிறங்கள் எவை?
   3. அற்பபாவம் நமக்குச் செய்யும் தீமைகள் எவை?
   4. பாவசங்கீர்த்தனத்திற்கு முன் செய்ய வேண்டிய ஆயத்தங்கள் எவை?
   5. திருவழியுணவு என்ருல் என்ன?

2. இடைவெளி நிரப்பி எழுதுக.
   1. பாஸ்கு மெழுகுதிரி.......... வெளிச்சம்.............. குறிக்கிறது.
   2. நம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர்................... உண்டு.
   3. ஞானஸ்நானத்திற்குப் பிறகு பாவம் கட்டிக் கொள்ளுகிறவன்...........என்னும் தேவதிரவிய அனுமானம் பெறல் வேண்டும்.
   4. முழு அறிவோடும், முழுச் சம்மதத்தோடும் கனங் கொண்ட காரியத்தில் மீறுவது...............பாவம் எனப்படும்.
   5. தேவநற்கருணைப் பெட்டியுள் தேவநற்கருணை இருப்பதைக் காட்ட..............எரிந்து கொண்டிருக்கும்.

3. பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.
   1. ஒருவன் கிறீஸ்தவன் ஆகுமுன் பெறும் தேவதிரவிய அனுமானம்.
      (அ) குருத்துவம், (ஆ) பச்சாத்தாபம், (இ) ஞானஸ்நானம்.
   2. யேசுநாதர் திவ்விய நற்கருணையை,
      (அ) தாம் பிறந்தபோது,
      (ஆ) உலகம் உண்டாக்கப்பட்டபோது,
      (இ) தமது கடைசி இரவு உணவின்போது ஏற்படுத்தினர்;
   3. நாம் அடிக்கடி பயன்படுத்தும் அருட்கருவி.
      (அ) பரலோக மந்திரம்.
      (ஆ) சிலுவை அடையாளம்.
      (இ) பச்சாத்தாபம்.
   4. திவ்விய நற்கருணைக்குரிய மிகப் பெரிய திருவிழா.
      (அ) கர்த்தர் பிறந்த திருநாள்,
      (ஆ) முதல் நன்மை பெறும் திருநாள்.
      (இ) பெரிய வியாழன்.
   5. சிலுவைப்பலிக்கு ஒப்பான பலி.
      (அ) மிருகப்பலி.
      (ஆ) பூசைப்பலி.
      (இ) பழைய ஏற்பாட்டின் பலி

4. சரியாயின் ✓ 'சரி' என்றும், பிழையாயின் × 'பிழை, என்றும் எழுதுக.
   (அ) குரு மரித்தோர் பூசையில் அணியும் திருவுடையின் நிறம் வெள்ளை,
   (ஆ) திருச்சபையின் கட்டளைகள் பத்து.
   (இ) நோயில் பூசுதல் பெறுவதற்கு பாவசங்கீர்த்தனம் செய்திருக்க வேண்டும்.
   (ஈ) குருத்துவம் என்னும் தேவதிரவிய அனுமானத்தை மேற்றிராணியார் கொடுக்கிருர்.
   (உ) 21 வயது நிரம்பியவர்களும் 60 வயதுக்குட்பட்டவர்களும் ஒருசந்தி இருக்கக் கடமைப்பட்டவர்கள்.

5 "எ" பகுதியில் உள்ளவற்றிற்கு "பி" பகுதியிலுள்ள பொருத்தமானவற்றின் எழுத்துக்களை அடைப்புக் குறியுள் இடுக.

| (எ) | (பி) |
|---|---|
| 1. ஒருசந்தி (..................) | (அ) யுவான்விலாடெ சுவாமிகள். |
| 2. நல்ல பாவசங்கீர்த்தனம் செய்ய நம்மிடம்(........) முக்கியமாக இருக்க வேண்டியது. | (ஆ) கிறீஸ்துநாதரின் திருவுடலையும் திரு இரத்தத்தையும் பெறுகிரேம் |
| 3. இலங்கையில் கிறீஸ்து சமயத்தைப் போதிப்பதற்கு முதல் முதலில் வந்த போதக சபைத் தலைவர். (...............) | (இ) மனஸ்தாபம், |
| 4. திவ்விய நன்மையில் நாம் (.............. ) | (ஈ) ஞாயிற்றுக்கிழமைகளிலும் கடன் திருநாட்களிலும் பூசை காண்பது. |
| 5. திருச்சபையின் முக்கிய கட்டளைகளில் ஒன்று; (.......... ) | (உ) பெரியவெள்ளிக்கிழமை |

6. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்திசெய்க.
   (அ) அருள்நிலையை இழந்த கிறீஸ்தவன் பெறவேண்டிய தேவதிரவிய அனுமானம் ...... ..
   (ஆ) திவ்விய பூசையின் பிரதான பகுதி.
   (இ) ஒருமுறைமட்டும் பெறக்கூடிய தேவதிரவிய அனுமானங்கள்.
   (ஈ) ........ ஆன்மாவைச் சேர்ந்தஇரக்கச்செயல் ஆகும்.
   (உ) இரண்டாம்ஞானஸ்நானம் என்றுபெயர்பெறுவது.

### பகுதி II.

7. (அ) நோயில் பூசுதல் கொடுப்பதற்கு குருவானவர் வருமுன் செய்ய வேண்டிய ஆயத்தங்கள் எவை?
   (ஆ) ஞானஸ்நானம் எப்படிக் கொடுக்கப்படுகிறது.
8. (அ) மன்னர் வேதசாட்சிகள் பற்றிச் சுருக்கமாக எழுதுக.
   (ஆ) அருட்கருவிகள் என்ருல் என்ன? அவற்றைப் பற்றிக் குறிப்பு எழுதுக.

# மறைக்கல்விப் பரீட்சை 1970.

மாதிரி விஞக்கள் **8-ம் வகுப்பு**

நேரம்: 1½ மணி. சுட்டிலக்கம்.........

### பகுதி I. (30 புள்ளிகள்)

1. இடைவெளிகளை நிரப்புக.
   1. கிறீஸ்தவர்களின் இரட்சணியத்தின் அடையாளம் ... ... ... .........
   2. பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்மேல்......... ......................... இறங்கினர்
   3. கிறீஸ்து இராசா திருநாளை ஐப்பசி................. கொண்டாடுகிரேம்;
   4. தேவதாய் மாசில்லாமல் உற்பவித்த திருநாள்......
   5. யேசுநாதர் மீண்டும் உலகிற்கு சகல மனிதரையும் ...................வருவார்.
   6. யேசுநாதர் சிலுவை மரணம்மட்டும்..............
   7. யேசுநாதர் ...... ......... மலையிலிருந்து பரலோகத்துக்கு ஆரோகணமானர்.
   8. தேவதாயை மகிமைப்படுத்த நாம் சொல்லும் செபம் ...............
   9. பலிபூசையில் யேசுவின்...................... புசிக்கப்படுகின்றது.
   10. யேசுநாதர் உயிர்த்தபின் காட்சிகொடுத்து மனந்திருப்பிய ஒருவர் ........................
   11. விசுவாசத்தின் முக்கிய இரகசியங்கள் அடங்கி இருப்பது ........... .........
   12. யேசுநாதரின் உயிர்ப்பைப்பற்றிச் சந்தேகித்த அப்போஸ்தலர் ...................
   13. யேசுநாதரைச் சிலுவையில் அறைந்து கொல்லக் கேட்டவர்கள் ................
   14. பரிசுத்த ஆவியின் பெயரால் நடைபெறும் திருப்பலிப் பூசைகளில் கையாளப்படும் திருஉடைகளின் நிறம் ..............
   15. யேசுவின் பாடுகளைத் தியானிக்க உதவியாக இருக்கும் தேவ இரகசியங்கள் ......................
   16. யேசுநாதர் உயிர்த்த ................ நாள் மோட்சத்துக்கு ஆரோகணமானர்.
   17. யேசு உயிர்த்தாரென்று சான்று கூறியவர்கள் ................. ...
   18. கடவுள் நமக்குக் கொடுத்த உணவு, ஆடை, உடல் நலம், அறிவுத்திறன் யாவும் ..........................
   19. நாம் நமக்குவரும் சகல துன்பங்களையும் பொறுமையுடன் அனுபவிக்கும்போது ஒப்பாயிருப்பது. ..................
   20. கடவுளின் வெளியிடுதல் என்ருல் ........................

### பகுதி II. (40 புள்ளிகள்)

21. முதல் மனிதனுக்கு இருந்த சிறந்த நன்கொடைகள் எவை?
22. யேசுநாதர் யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெற்ற வரலாற்றை விபரி?
23. யேசு சிலுவையில் வசனித்த ஏழு வாக்கியங்கள் எவை?
24. யேசுநாதர் கடவுளுடைய திருமகனுகவும், மெய்யான கடவுளாகவும் இருக்கிருர் என்று சான்று பகர்ந்தவர்கள் யார்?
25. அருள் வாழ்வினுல் நமக்கு உண்டாகும் நன்மை என்ன?
26. கடவுள் இரக்கம் உள்ளவர் என்று ஏன் சொல்லுகிரேம்?
27. மோயீசன் கடவுளுடன் பேசியவரலாற்றை விபரி?
28. தூய ஆவியானவரின் ஏழுகொடைகள் எவை?

### பகுதி III. (30 புள்ளிகள்)

29. i ஆசாரத்துக்குரிய யோசேவாஸ் முனிவரைப் பற்றி சிறு கட்டுரை எழுதுக;
    ii நாயக்க மன்னர் கத்தோலிக்கருக்குப் புரிந்த உதவிகளைப்பற்றிக் கூறுக.

அல்லது

30. iii யாக்கோமே கொன்சால்வெஸ் சுவாமிகள் இலங்கைக் கிறீஸ்தவர்களுக்குச்செய்த தொண்டுகளை விபரி.
    iV ஒல்லாந்தர் கத்தோலிக்க திருச்சபையைத் துன்புறுத்தியது எவ்வாறுஎன எழுதுக?

# இலங்கைக் கத்தோலிக்க மாணவர் சங்கம்

செப்டெம்பர் மாதம் 22-ம் திகதி இலங்கைக் கத்தோலிக்க மாணவர் சங்க அங்கத்தினர்கள் குருநாகல நகருக்கு விஜயம்செய்து எலுகல என்ற மலையில் வாழும் டாமர மக்களுக்குத் தேவையானவை எவை என்பதைப்பற்றி ஆராய்ந்துள்ளனர்.

அம்மலையில் வாழும் நாற்பது குடும்பங்களும் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டு நகர தொடர்புகள் அற்று வாழ்கின்றன. பிள்ளைகளின் கல்வி அபிவிருத்திக்கும், குடும்பத் தலைவர்களின் வேலைவாய்ப்புகளுக்கும், நிரந்தர விடுவசதிக்கும் வழி வகுக்கும் முறைகளைப்பற்றி அவர்கள் ஆராய்ந்தார்கள்.

அவர்கள் எடுக்கவிருக்கும் முடிவுகளுக்கு அரசாங்கமும் பூரண ஒத்துழைப்பு அளிக்குமென எதிர்பார்க்கப் படுகிறது. இவர்களின் ஆக்கப் பணி ஒருவாரகாலம் தொடர்ந்து நடைபெற்றது.

S.லோறன்ஸ் சுவாமிக்கண்ணு

✠

# 1-ம் வருட மரண ஞாபகம்

**சவிரிமுத்து வஸ்தியாம்பிள்ளை முத்துத்தம்பி**

தோற்றம்: 22-8-1986. மறைவு: 11-10-1970.

*சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்*

இவ்வுலகை விட்டுப்பிரிந்தாலும் எங்கள் மனதில் நின்றும் நீங்காத ச. வஸ்தியாம்பிள்ளை முத்துத்தம்பிஅவர்கள் மறைந்த முதலாவது ஆண்டு இம்மாதம் 11-10-70 அன்று நிறைவுறுவதால் அன்று காலை 6-15 மணிக்குக் கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்தில் திக்கப்பாடற்பூசை நடைபெறும். இதனைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியர், மற்றும் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்ருடும்படி வினயமாய் கேட்டுக் கொள்கிரேம்.

இவரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், மருமக்கள், உற்ருர் உறவினர்.

கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.

129|70.

**நன்றியறிந்த ஸ்தோத்திரம்**

சறபிரசாதநாதரின் இரக்கத்தினுலும், திருஇருதயயேசு, பரிசுத்த சிலுவைநாதர், கல்லறை ஆண்டவர், பாலகயேசுவின் இரக்கத்தினுலும், சந்தானமாதா, பல நாமதேயங்கள் கொண்ட பரிசுத்த தேவதாயார், அர்ச். சூசையப்பர், அர்ச் யுவக்கீம்முனிவர், புனிதயூதாததேயு, அர்ச். அந்தோனியார், அர்ச். சந்தியோகுமையோர், அர்ச். ஆரோக்கியநாதர், அர்ச். நீற்றம்மா, புனித கயித்தாம் முனியோர், 12-ம் பத்திநாதர், 23-ம் அருளப்பபாப்பரசர் இவர்களின் வேண்டுதலினுலும் எனது வருத்தம் குணமாகி இன்னும் நான் கேட்ட விண்ணப்பமும் கிடைக்கப் பெற்றேன். காலதாமதத்திற்கு மன்னிப்புக்கோரி நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன். இவர்களின் நாமம் என்றும் புகழப்படுவதாக.

இளவாலை. ஓர் அடியாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்விப் பரீட்சை — 1970.

## 6-ம் வகுப்பு

(மாதிரி வினக்கள்)

நேரம் $1\frac{1}{2}$மணி.

### பகுதி I.

1. பின் வருவனவற்றிற்குச் சுருக்கமான விடை எழுதுக.
   1. மனிதனுடைய கதி எது?
   2. புதிய உடன்படிக்கையின் பலி யாது?
   3. திருச்சபையின் முதல் வேதசாட்சி யார்?
   4. மனிதனுடைய சாவு எதனுல் வந்தது?
   5. "பெந்தகோஸ்த்" என்பதன் பொருளென்ன?

2. பின்வருவன ஒவ்வொன்றிலும் 1ஆம் எண் நிரப்பாமல் விடப்பட்டிருக்கிறது. மிகப் பிரதானமானதை அதில் நிரப்பிவிடுக.
   1. ஆதிப்பெற்ருேர் பாவத்தினுல் இழந்துவிட்டவை.
      1.
      2. நன்கொடைகள்.
   2. கிறீஸ்துவின் உத்தானம் நமக்கு அறிவிக்கும் உண்மைகள்.
      1.
      2. நாமும் ஒருநாள் உயிர்ப்போம்.
   3. திருச்சபை கிறீஸ்துநாதரின் உடல்.
      1.
      2. நாம் ஒவ்வொருவரும் உறுப்புக்கள்.
   4. மோட்சத்தின் இன்பங்கள்.
      1.
      2. தீமை, துயரமின்றியிருத்தல்.
   5. 2ஆம் வத். சங்கத்தை நடத்திய 'பாப்பு'க்கள்.
      1.
      6-வது சின்னப்பர்.

3. இடைவெளிகளை நிரப்பி எழுதுக.
   1. கன்னிமரியம்மாளுடைய மகன் உண்மையான ........ ... கன்னிமரியம்மாளைக் கடவுளின் ......... என்கிறேம்.
   2. ... ......... முதல் மூன்று நூற்றுண்டுகளிலும் பத்து வேதகலாபனைகள் நடைபெற்றது.
   3. கிறீஸ்துநாதர் ........... நாற்பதாம்நாள் தமது சொந்த......... பரலோகத்துக்கு .........
   4. ... ...... கடவுளின் மூன்றும்ஆள். அவர் ......... சுதனையும்போல ...... .. கடவுள்.
   5. கிறிஸ்துநாதர் கடைசி ........... செய்ததைக் குருபூசையிற் செய்கிறுர்.

4. பின்வருவனவற்றில் மிகவும் பொருத்தமானதின்கீழ்க் கீறிடுக.
   1. திருச்சபை தவற முடியாது.
      1. திருச்சபை ஆயர்கள் அறிவாளர்கள்.
      2. கிறீஸ்துநாதர் அதனேடிருக்கிருர்.
      3. பரிசுத்தஆவி புனிதப்படுத்துகிறுர்.
   2. திரிகால மணிச்சப்தம் கேட்கும்போது.
      1. மனித அவதார நிகழ்ச்சியை நினைவு கூருதல்.
      2. திரிகாலச் செபம் சொல்லுதல்.
      3. செய்துகொண்டிருக்கும் அலுவலிற் கவனம் செலுத்துதல்.
   3. திருச்சபை ஆண்டின் பெருந் திருவிழாக்கள்.
      1. கிறீஸ்து இராசா விழா.
      2. பங்குக்கோவில் விழா.
      3. 'பாஸ்கா' விழா
   4. கிறீஸ்துநாதர் இவ்வுலகுக்குத் திரும்பவும் வருவதன் நோக்கங்கள்.
      1. எல்லா மனிதருக்கும் தீர்ப்பளித்தல்.
      2. தாம் பரலோகத்துக்கு எழுந்தருளுதல்.
      3. மீட்புவேலையை முடித்தல்.
   5. திவ்விய பலியின் முக்கிய பாகம்.
      1. இறைவாக்கு வழிபாடு.
      2. வருகைப் பாடல்.
      3. நற்கருணை வழிபாடு.

5. சரியாயின் "√" என்றும், பிழையாயின் "×" என்றும் எழுதுக.
   1. மோட்சத்திலுள்ளவர்கள் பரிசுத்தமடைய முயற்சிக்கிறுர்கள் ( ).
   2. 12ஆம் பத்திநாதர் தேவமாதாவின் ஆரோபணத்தை விசுவாச சத்தியமாகப் பிரகடனம் செய்தார் ( ).
   3. மோயீசன் இஸ்ருயேல் மக்களை வாக்குத்தத்த நாட்டுக்குள் அழைத்துச் சென்றுர் ( ).
   4. அநித்திய தண்டனையை உத்தரிப்பிடத்தில் தீர்க்கலாம் ( ).

6. A பகுதியில் உள்ளவற்றுக்கு B பகுதியில் பொருத்தமானவற்றின் எழுத்துக்களை அடைப்புக்குறியுள் இடுக.

| A. | | B. |
|---|---|---|
| 1. இஸ்றவேல் | ( ) | அ. புனித அத்தனுசியார் |
| 2. அநித்திய தண்டனை | ( ) | ஆ. நெருப்பு மந்திரித்தல் |
| 3. திருச்சபைப்பிதா | ( ) | இ. திருச்சபையின் சுயாதீனம். |
| 4. 4ஆம் நூற்றுண்டு | ( ) | ஈ. தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். |
| 5. பாஸ்கு திருவிழிப்பு | ( ) | உ. உத்தரிப்பிடம். |

7. பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்திசெய்க.
   1. சிதறிப்போனதைத் தேடி.........
   2. வானமும் பூமியும் ஒழிந்து .........
   3. ஆண்டவரே! உலகின் இரட்சகரே! எங்களை இரட்சித்தருளும் ............
   4. நீங்கள் உலகெங்கும் ...........
   5. சிறுவர்களை என்னிடம்.............

### பகுதி II.

1. புரொட்டஸ்தாந்தமார்க்கம் உண்டானதுபற்றி மூன்று வசனங்கள் எழுதுக.
2. கடவுள் தம்மை நமக்கு வெளிப்படுத்தியது பற்றி மூன்று வசனங்கள் எழுதுக.
3. நசரேத்தூரில் வாழ்ந்த யேசுவின் முன்மாதிரிகை பற்றி மூன்று வசனங்கள் எழுதுக.
4. புனித சின்னப்பரின் பிரயாணங்களைப்பற்றி மூன்று வசனங்கள் எழுதுக.
5. பரி. தந்தை 23-வது அருளப்பரைப்பற்றி மூன்று வசனங்கள் எழுதுக.

# ரோமை நகரின் வீழ்ச்சி ரோமைத் திருச்சபையின் வீழ்ச்சியன்று

**நிகழும் 1970ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் 20ஆம் திகதி ஞாயிறன்று இத்தாலிய தேசம் அடங்கலுமுள்ள ஆலய மணிகள் ஆர்ப்பரித்து, 1870ஆம் ஆண்டு அதே நாளில் நிகழ்ந்த ஒரு மகாசம்பவத்தின் நூற்றாண்டு நிறைவை ஞாபகத்திற்குக் கொண்டுவரலாயின. இதோ கத்தோலிக்க திருச்சபைக்கு இறுதிக் காலம் வந்துவிட்டதென்றசெய்தி உலகெங்கணும் பரந்தமைக்குக் காரணமான அச்சம்பவம் வருமாறு :**

1870ஆம் ஆண்டு அதே மாதம், அதே திகதியில் 9-ம் பத்திநாத பாப்பானவரிடமிருந்து ரோமை நகரை இத்தாலி கைப்பற்றி தனக்கென்று சுயமான ஒரு தலைநகராக ரோமைநகரை ஆக்கிக் கொண்டு ஒரு புதிய இராச்சியமாயிற்று. அன்று தினமே பாப்பரசும் தனது நாடுகளில் எஞ்சியிருந்ததையும இழந்தது. இது செய்தி காட்டுத்தீபோன்று நாடுகள்தோறும் பரந்தபோது ஆங்காங்கு பலரினதும் வாயிலிருந்து பிறந்த அபிப்பிராயங்கள் பலவாகும்.

ஐரோப்பாவிலிருந்த திருச்சபை விரோதிகள் செவிக்கு இது செய்தி எட்டவே, அவர்கள் மகிழ்ச்சி மேலிட்டவர்களாய், ரோமை நகரின் வீழ்ச்சி ரோமான் கத்தோலிக்க திருச்சபையின் வீழ்ச்சியென்றும், அதன் முடிவு காலம் முடுகிவிட்டதெனறும், இனிமேல் அது படிப்படியாக நிலைபிறழ்ந்து கலைந்துபோக இதுதான ஆரம்பமென்றும் சங்கநாதஞ் செய்தார்கள். உலகிலுள்ள கத்தோலிக்கமக்களிலும அநேகமானோர் இதனை ஒப்புக்கொண்டார்கள் போல்கவலையில் ஆழ்ந்தார்கள். திருச்சபை இனிமேல் உயிர்பிழைத்திருப்பதைக் காணும் நம்பிக்கை இழந்தவர்களாய்த் தாங்கள் தனிக்கவிடப்பட்டிருப்பதாகவும் சிலர் நினைத்தார்கள்.

பாப்பரசர் அதுமுதல் ஒரு வைதீக தலைவராய், ஓர் அரசராய் இருப்பது நின்றுவிட்டது. இன்றியமையாதிருந்ததாலும், தமது சுயரீதியின் மனநிதானத்தாலும் 9ஆம் பத்திநாத பாப்பானவர் தாமாகவே தம்மை வத்திக்கானின் மறியற்காரரென அப்பொழுதே பகிரங்கமாக அறிவித்துக் கொண்டார். இதனைத்தொடர்ந்து ஏறக்குறைய 50 ஆண்டுகளாக அவரும், அவரைப் பின்தொடர்ந்துவந்த பாப்புமார் நால்வரும் இத்தாலிய அரசாங்கம் பாப்பரசின் நாடுகளை அநீதியாகக் கவர்ந்து கொண்டதென்றே எண்ணியெண்ணி மனம் புண்ணாய் வருந்தினார்கள். 9ஆம் பத்திநாதரும் இத்தாலி கொடுக்க முன்வந்த எந்தவிதமான நஷ்டஈட்டையும் ஏற்றுக்கொள்ள இணங்கவில்லை. அது அபகரித்துக்கொண்டநாடுகளை எத்தகைய நிபந்தனையுமின்றியே திரும்பக் கையளித்துவிட வேண்டுமெனச் சாதித்து, அது வகுத்த எவ்வித திட்டத்திற்கும் செவிமடுக்கவில்லை. அதனால் 1870ஆம் ஆண்டு இரு நாடுகளுக்குமிடையே மனக்கிலேசம உண்டுபண்ணக் கூடிய நிகழ்ச்சிகள் பலநடைபெற்று, அதனால் கர்ணகடூரமான பேச்சுகளுக்கும் வழி திறந்துவிட்டன.

— "ஞானம்" —

இதற்குப் பத்து ஆண்டுகளின் முன்னரே இத்தாலி செயலளவில் ஒன்றுபட்ட ஒரு இராச்சியமாயிற்று. ஆயினும் மத்திய இத்தாலியில் பரந்திருந்த பாப்பரசின நாடுகள் மட்டும் இத்தாலி பூரணமாக ஒன்றுபட்ட ஒரு இராச்சியமாய் இருப்பதற்குத் தடையாயிருந்தன. அதனால் இத்தாலிய அரசரான 2-வது விக்டர் இம்மானுவேலின் படைகள் போரிலிறங்கி ரோமைநகரையும், அயலிலுள்ள பாப்பரசின் நாடுகளையும் அடிப்படுத்த முனைந்தன. அதற்கிடையில் புரட்டாசி மாதம் 8ஆம் திகதியன்று— அதாவது கடைசியான படையெடுப்புக்கு இருவாரங்களின் முன் இம்மானுவேல் அரசர் பாப்பானவருக்கு எழுதிய கடிதத்திலே போரிலிறங்காது சமாதானமாய் விட்டுக்கொடுக்குமாறு அவரைப் பரிந்து வேண்டினார். ஆனால், அரசரின் சமாதான நிபந்தனைகளுக்கு — சாணுகதியடைவதற்கு அவர் மனங்கொள்ளவில்லை.

அரசரின் படைகள் போர் செய்ய முனையுமிடத்து, அவைகளை எதிர்த்துப் போரிலிறங்க வேண்டாமென்றும், பின்வாங்கிவிடவேண்டுமென்றும் பாப்பானவர் தமது படைவீரர்களுக்கு ஆணை பிறப்பித்தார். ஆனால், அடையாள எதிர்ப்பு மட்டும் நடாத்திவிட்டுப் போராயுதங்களைக் கீழே போட வேண்டுமென்றும, அவர்களுக்கு மேலும் ஆணை பிறப்பிக்கபபட்டது. இவ்விதமாக இரத்தக் களரியை நீக்கவேண்டுமென்றும், அதேவேளையில் பலவந்தத்தின் பேரிலேயே தாம்விட்டுக்கொடுத்ததாகஉலகறியச்செய்ய வேண்டுமென்றும் பாப்பானவர் உணர்ந்தார்.

1870ஆம் ஆண்டு புரட்டாசி 20ஆம் திகதியன்று விடியற்காலை அரசரின்படைகள் ரோமைநகரின் கேற்றுகள் மூன்றிலே குண்டுமாரி பொழியத் தொடங்கின. அப்பொழுது பாப்பானவர் சம்பேதுருவானவர் மகாதேவாலயத்தின் கப்பலாவில் உடனடியாக வெள்ளைக்கொடியை ஏற்றுமாறு ஆஞ்ஞாபித்தார். அன்று நிகழ்ந்த போரிலே இத்தாலிய போர்வீரர்களில் 56பேர் இறக்க, 141பேர் காயமடைந்தனர். பாப்பரசின் போர்வீரர்களில் 20பேர் இறக்க, 49பேர் காயமடைந்தார்கள்.

அன்றுதினம் பிற்பகல் தற்காலிக யுத்தத்தின் இடைக்கால சமாதான உடன்படிக்கை ஒன்று செய்யப்பட்டது. இவ்வாறாக ரோமைநகர் ஐக்கியப்பட்ட இத்தாலியின் தலைநகரமாயிற்று. பின்னர் படையெடுப்பு நடைபெற்று அநேக மாதங்களின் பின் இத்தாலிய அரசாங்கம் "உத்தரவாதங்களின்சட்டம்"என அறியப்பட்ட பத்திரம் ஒன்றைப் பாப்பானவரிடம் சமர்ப்பித்தது. அதிலே முக்கியமான மூன்று அம்சங்கள் வருமாறு: (1) பாப்பானவரின் திருச்சமூகம் பூசிதமானதும், இன்றியமையாததுமாகும். (2) அவர் அரசருக்குரிய, மரியாதைக்கும, பாதுகாப்புக்கும் உரிமையானவர் (3) அவர் இழந்த நாடுகளின் போல் நஷ்டஈடாக வருடந்தோறும் அவருக்கு வருமானம் அளிக்கப்பட வேண்டியவர் என்பனவே.

9-ம் பத்திநாதர் தமது வாழ்வின் எஞ்சிய எட்டு வருடங்களையும் சுயேச்சையான ஒரு மறியற்காரராக வத்திக்கான் எல்லைக்குள் அடைபட்டவர்போல் இருந்து

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

### ஐப்பசி — 1970

| | | | |
|---|---|---|---|
| 11 | ஞாயிறு | வருடத்தின் 28-ம் ஞாயிறு | [ப] |
| 12 | திங்கள் | தினப்பூசை | [ப] |
| 13 | செவ்வாய் | ,, | [ப] |
| 14 | புதன் | ,, | [ப] |
| 15 | வியாழன் | புனித தெரேசாள் | [வெ] |
| 16 | வெள்ளி | தினப் பூசை | [ப] |
| 10 | சனி | ,, | [ப] |

*சத்தியவேத பாதுகாவலன்*

# கத்தோலிக்க இலக்கியத்தின் அவசியம்

தமிழில் கத்தோலிக்க இலக்கியம் இன்னும் குழந்தைப் பருவத்திற்றான் இருக்கிறது என்றால் மிகையாகாது. கத்தோலிக்க சமயம் நம் நாட்டில் வேரூன்றி நான்கு நூற்றாண்டுகளாகியும் குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சியை நாம் இத்துறையில் காண முடியவில்லை. முதன் முதலாக அச்சேறிய தமிழ்நூல் ஒரு கிறிஸ்தவ நூல் என்று நாம் பெருமைப்பட்டாலும், இன்றைய நிலை பெருமைப்படத்தக்கதாயில்லை. இன்று நாம்கிறிஸ்தவ இலக்கியத்தை வளர்க்கவில்லையென்றால் கிறிஸ்துவைப் பிறருக்கு எப்படி அறிவிப்பது?

இலக்கியத்தை இலக்கியத்துக்காகவே, அதாவது அவற்றைப் படிப்பதால் ஏற்படும் இன்பத்தை நுகர்வதற்காகவே இன்று மக்கள் அவற்றை நாடிச் செல்வதில்லை. அதற்கு மாறாக இலக்கியம் மக்களை நாடிச் செல்லவேண்டியிருக்கிறது. பரீட்சைக்காகக் கற்பவர்களைவிட, பழந்தமிழ் இலக்கியங்களை எடுத்துப் பார்ப்போர் எத்தனைபேர்? இதற்குமாறாகப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், சிறுகதைகள், நாவல்கள் என்றால் அவை சிறியோர் முதல் பெரியோர்வரை யாவர் கையிலும் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். இதிலிருந்து கத்தோலிக்க இலக்கியங்களை வளர்ப்போர், மக்களைக் கவர வேண்டுமானால் எந்த வழியிலே செல்லவேண்டுமென்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

ஆழ்ந்த அறிவும், கற்பனை வளமும் வாய்ந்த பெரியோர், கற்றோர் புகழும் உயர்ந்த நூல்களைப் படைக்கட்டும். அவைதாம் என்றும் என்றும் நிலைத்திருக்கக் கூடியவை. தேம்பாவணியையும், இரட்சணிய யாத்திரீகத்தையும் போன்ற இலக்கியங்களை உருவாக்கக் கூடியவர் இருப்பின் அவர்களைக் கிறிஸ்தவ உலகம் மட்டுமல்ல தமிழுலகமே ஏற்றுக் கௌரவிக்கும்.

ஆனால் அதுவரை நாம் வாளா இருப்பதா? இன்று பொதுமக்களின் விருப்பத்தைப் புறக்கணித்து எந்த இலக்கியமும் வாழமுடியாது. மக்களுடைய அன்றாட வாழ்வில் அவர்கள் கைகளில் தவழும் ஏடுகளில் கிறிஸ்தவ மணம் கமழும் கதைகள், கட்டுரைகள் இடம் பெறவேண்டும். கிறிஸ்தவ வாழ்வு கோயிலோடு முடிந்து விடுவதில்லை. உலக வாழ்விலும் அது ஒன்றித்திருக்க வேண்டும். அத்துடன் மக்களைக் கவரவேண்டுமாயின் அவர்களுடைய வாழ்வையொட்டியும் எழுத வேண்டும், கிறிஸ்தவ எழுத்தாளர் உலகியல் இலக்கியங்களைப் படைக்கும்போதும் அவற்றில் கிறிஸ்தவ மணம் கமழக்கூடியதாக, கிறிஸ்தவ ஒழுக்கம், பண்பு மிளிரக்கூடிய அவற்றை ஆக்குவதே சிறந்தது. பிற சமயத்தினர் எமது சமயத்தில் ஈடுபாடு கொள்வதற்கு இது வழிகோலும்.

பானையிலிருந்தாற்றான் அகப்பையில் வரும் என்பதுபோல மெய்யான கிறிஸ்தவ வாழ்வின்றிக் கிறிஸ்தவ இலக்கியங்களை உருவாக்க முடியாது. எழுத்தாளரின் சிந்தனையிலும், உள்ளத்திலும் ஊறி நிற்கும் உணர்ச்சிகளைத்தான அவரது எழுத்தில் வடிதிருக்கக் காணலாம். இறைவன்மீது உண்மையான அன்பு கொண்டவரே பக்திச் சுவைப் பாடல்களைப் பாட முடியும். உள்ளத்தில் ஆழ்ந்த விசுவாசமிருந்தாற்றான் அது வார்த்தைகளில் தொனிக்கும். இங்ஙனமில்லாவிட்டால் எல்லாம் போலியாகிவிடும். போலியைக் கண்டு உலகம் ஏமாறாது. வாக்கினிலே உண்மையொளி இல்லாவிட்டால் அத்தகைய இலக்கியத்தால் யாதொரு பயனுமில்லை.

## பழைய கோபதாபங்களை மறவுங்கள்

வத்திக்கான் ஒற்றுமைக் காரியாலயத்திலிருந்து மேற்றிராணிமாருக்கு அண்மையில் கிடைத்த வேண்டுகோளில் கிறீஸ்தவ சபைகளின் ஒற்றுமையை வளர்க்க அவர்களாலான முயற்சிகளை எல்லாம் எடுக்கத் தூண்டப்பட்டிருக்கின்றனர். கிறீஸ்தவர்கள் தம்மிடையே நிலவ வேண்டிய ஒற்றுமையை "அனுதின உணவு" போல் தேடிவரவும், பழைய கோபதாபங்களை மறந்து, தாழ்மையுடன், குற்றங்களை ஏற்றுக்கொண்டு இன்றைய நிலையை திருத்தி அமைக்க முயற்சிக்கவும், விசுவாசிகள் யாவரும் உணர்ச்சியுள்ளவர்களாயிருக்கவும் வேண்டுமென அவ்வேண்டுகோள் கேட்டுக்கொள்ளுகின்றது.

---

மேடை ஏறுகின்றது

திருமறைக் கலாமன்றத்தினரின்

**"எழுதிய கரம்"**

இசை- உரை நாடகம்

இடம்: சம்பத்திரிசியார் கல்லூரி மண்டபம், யாழ்நகர்.

நாள்: **14-10-1970**.

நேரம்: பி. ப. 7 மணி.

---

## அகில இலங்கை மறைக்கல்வி மகாநாடு

**எங்கே?** யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார் கல்லூரி மேன்மாடி மண்டபத்தில்.

**எப்போது?** 1970 டிசம்பர் 15-ம், 16-ம் நாட்களில்.

**ஏன்?** நமது பிள்ளைகளுக்கு — அவர்களின் மறைக் கல்வியூட்டும் பொறுப்பைப் பெற்றோராகிய நாமே ஏற்றுக்கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டது. இத் தலையாய கடனை நாம் எப்படி நிறைவேற்றலாம் என்பதனை ஆராய்வதற்காக.

**எப்படி?**

- அகில இலங்கையிலுமுள்ள தமிழ்க் கத்தோலிக்க விசாரணைப் பங்குகளிலிருந்து தாய்மார்களும், தகப்பன் மார்களும் பங்குக் குருவானவர் தலைமையில் வந்து கூடுவார்கள்.
- மறை ஆயர்களும், மறைக்கல்வி விற்பன்னர்களும் அனுபவமுள்ள பெற்றோர் பிரதிநிதிகளும், உரையாற்றுவார்கள்.
- மகா நாட்டு அவையினர் குழுக்களாகப் பிரிந்து குறித்த பொருள் சம்பந்தமான பிரச்சினைகளை ஆராய்வார்கள்.
- குழுக்களின் ஆய்வுகளை மகாசபை கூடிப் பரிசீலனை பண்ணி அறிஞர்களின் துணையுடன் முடிவுகளைச் செய்யும்.
- விசாரணைப் பங்குகளின் பிரதிநிதிகளுக்கு உறையுளும், உணவும் வழங்கப்படும்.
- நிகழ்ச்சிகள் அனைத்தும் தமிழில் நடைபெறும்.

மகாநாட்டின் வெற்றிக்கு அனைவரது ஆதரவையும் வேண்டுகிறோம்.

மறைக்கல்வி நடு நிலையம்
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.
5-10-70.

G. T. பாலசுந்தரம், O. M. I,
யாழ்ப்பாண மேற்றிராசன
மறைக்கல்விக் குழுத்தலைவர்.

# இத்தாலிதேச ஒற்றுமை பூர்த்தியாகி 100 ஆண்டாயது

1870-ம் ஆண்டு ரோமாபுரியில் பாப்பரசரின் சேனைகள் இத்தாலிய அரசனின் சேனைகளால் தோற்கடிக்கப்பட்டுப் பாப்பரசர் ஆண்டுவந்த பிரதேசங்கள் அரசனால் கைப்பற்றப் பட்டு இத்தாலி தேசம் முழுவதும் அரசனால் ஆளப்பட்டு வந்தது. இச் சம்பவம் நடந்து இவ்வருடம் நூறு ஆண்டுகள் நிறைவு பெற்றுவிட்டன. இதை ஞாபகப்படுத்தும் பான்மையில் பரிசுத்த தந்தை கருதினால் டெல் அக்குவா ஆண்டவர் அவர்களை அந்த யுத்தகளத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார். திருச்சபைக்குரிய பிரதேசங்கள் இல்லாமற் போனது அதன் ஆன்ம நன்மைக்காகவே ஆயிற்று என பரிசுத்ததந்தை அன்று அளித்த பேட்டியில் குறிப்பிட்டுமிருக்கிறார் அத்தினத்தில் இத்தாலிய ஜனாதிபதிக்குப் பாப்பரசர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பி இத்தாலி தேசத்தைத் தேவன் ஆசீர்வதிக்கத் திருச்சபை மன்றாடிப்பதாகவும் வாக்குறுதி அளித்தார்.

---

**18—10—70**

**விசுவாசப் பரப்புதல் ஞாயிறு**

---

## ரோமை நகரின் ...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்தார். பின்னர் 1929ஆம் ஆண்டு இத்தாலிக்கும், வத்திக்கானுக்குமிடையே லத்தரன் உடன்படிக்கைக்குக் கைச்சாத்திடப்படுகிறவரை அவரைப் பின்தொடர்ந்துவந்த நான்கு பாப்புமாரும் அவரைப் போன்றே இருந்துவந்தனர். இந்த உடன்படிக்கையாலே முந்திய உத்தரவாதங்களின் சட்டம் அழிந்தது. வத்திக்கானை அது ஒரு சுயேச்சையான சுதந்திர இராச்சியமாகச்செய்தது. அதன் அரச தலைவராகப் பாப்பரசர் அங்கீகரிக்கப் பெற்றார். இந்தஉடன்படிக்கை 11ஆம் பத்திநாத பாப்பானவர் திருச்சபையையும். சிஞ்ஞோர் முசோலினி இத்தாலிய சர்வாதிகார இத்தாலியையும் ஆட்சிசெய்த காலத்திலே நிறைவேறியது.

திருச்சபை விரோதிகளும், பிற நம் நினைந்ததுபோல ரோமைநகரின் வீழ்ச்சியோடு ரோமைத்திருச்சபை வீழ்ச்சியடைந்ததா? இல்லை. ஆனால், இன்று அது மாபெரும் மாட்சியுற்று அனைத்துலகும் பரந்துசிறந்து வத்திக்கான் இராச்சியம் அமைந்திருக்கும் வத்திக்கான் குன்றைப்போல அசைவற்று, நிலைபெற்றுக் குன்றின்தீபம்போல் துலங்கி மங்காச்சுடரென இலங்குவது கண்கூடாகும்.

---



## பிரான்சீஸ்கன்சபை அழைக்கிறது

இச்சபையில்சேர்ந்து தங்களைத் தேவசேவைக்கு அர்ப்பணிக்க விரும்புகிறவர்கள் (ஆண்கள்) மார்கழி மாதம் 15-ந் தேதிக்குமுன் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பித்து, தொடர்பு கொள்ளவும்.

Very Rev. Bro. Superior Gcneral,
Franciscon Friary,
116, Vihara Road, Matala.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசையப்பர்முனிவர் அச்சகத்தில் 1970ஆம் ஆண்டு ஐப்பசிமீ 10ஆம் உ. சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம் 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org